***திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலே பாதாள சாக்கடைகளில் இறங்கி மனிதக் கழிவுகளைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடும்போது அதிக அளவிற்கு உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. நம்முடைய தமிழகத்திலே 1993 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 144 பேர் கழிவுகளை அகற்றும் இடங்களிலே மரணமடைந்திருக்கிறார்கள். அந்த அடித்தளத்து மக்களுக்கு சரியான பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் உயிரிழக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது. இப்போது கேரளாவிலே, பொறியியல் வல்லுநர்கள் Bandicoot என்ற ஓர் இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த robot இயந்திரத்தின்மூலம் கழிவுகளை அகற்றுவதற்காக அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆகவே, தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மரணம் அடையக்கூடிய சூழ்நிலையை மாற்றக்கூடிய வகையிலே, நம்முடைய தமிழகத்திலே அதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? குறிப்பாக, கழிவுகளை அகற்றும் பணிகளை தனியார்தான் செய்கிறார்களே தவிர, அரசின் மூலமாகச் செய்வதில்லை. தனியார்கள் எந்த ஓர் அனுமதியும் பெறுவதில்லை. அதனால்தான் பாதாளச் சாக்கடைகளைச் சுத்தப்படுத்தும் பணியில் திடீரென இறங்கும்போது, வாயுக்கள் தாக்கி, அவர்கள் இறக்கக்கூடிய நிலையிருக்கிறது. ஆகவே, அரசு இதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

(உ) விருதுநகர் மாவட்டம், தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தைத்தானே ஈர்க்கப் போகிறீர்கள்? சரி, சொல்லுங்கள்.

***திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். விருதுநகர் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகள் மற்றும் 11 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,687 ஊராட்சிக் குடியிருப்புகளுக்காக தாமிரபரணி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எங்களுடைய கழகத்

2019 ஜூலை 18] [திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்]

தலைவர் அன்றைய துணை முதல்வராக இருந்த மாண்புமிகு தளபதியார் அவர்கள் 29–10–2010 அன்று 597 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலே விருதுநகர் மாவட்டம், ஆலங்குளத்திலே அடிக்கல் நாட்டு விழாவை நடத்தி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக இதுவரை 7 பேரூராட்சிகளுக்கும், 7 ஒன்றியங்களுக்கும் குடிநீர் வந்துகொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன், சுருக்கமாகக் கேளுங்கள். நிறைய பேர் வாய்ப்பு கேட்கிறார்கள். என்னால் வழங்க முடியவில்லை. நீங்கள் எல்லோரும் எனக்கு ஒத்துழைப்பு தந்தால்தானே அவையை நான் நடத்த முடியும்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மீதமுள்ள சாத்தூர், வெம்பக்கோட்டை, சிவகாசி மற்றும் விருதுநகர் ஆகிய நான்கு ஒன்றியங்களில் உள்ள எந்தக் கிராமத்திற்கும் இன்று வரை தண்ணீர் வரவில்லை. தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன், உட்காருங்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் என்ன பிரச்சினையைச் சொல்ல வருகிறீர்கள் என்பது பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அதற்கு அமைச்சர் பதில் சொல்வார், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் பல்வேறு உறுப்பினர்களும் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இந்திய அரசின் சட்டம் மற்றும் நீதித் துறையானது மனிதக் கழிவுகளை அகற்றும் பணியாளர்களைப் பணியமர்த்துதல் மற்றும் உலர் கழிப்பிடங்களைக் கட்டுதல் (தடை) சட்டம், 1993*–The Employment of Manual Scavengers and Construction of Dry Latrines (Prohibition) Act, 1993 *என்ற புதிய சட்டத்தின்கீழ், உலர் கழிப்பிடங்களைக் கட்டுவோர் மற்றும் உலர் கழிப்பிடங்களில் மனிதக் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடுத்துபவர்களுக்கு சிறைத் தண்டனை மற்றும் தண்ட தொகை விதித்து 5–6–1993–ல் சட்டம் இயற்றியது.*

மேற்படி சட்டத்தில் கடுமையான சட்ட விதிகள் இல்லாத காரணத்தினால், அதனைத் திரும்பப் பெற்று, மனிதக் கழிவுகளை அகற்றும் பணியாளர்களைப் பணியமர்த்த தடை செய்தல் மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வு சட்டம், 2013 என்ற சட்டத்தினை 18–9–2013–ல் இயற்றி 16–12–2013 முதல் நடைமுறையில் உள்ளது.

முற்பகல் 11–35

மேற்படி சட்டத்தின்படி, தமிழ்நாட்டில் மனிதக் கழிவுகளை அகற்றும் பணியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மனிதர்களை ஈடுபடுத்த அரசாணை எண் 40, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 5–3–2015–ல் தடை விதித்து அதனை மாநில அரசிதழில் வெளியிட்டு 15–3–2015 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் 1993 ஆம் ஆண்டு முதல் பாதாள சாக்கடை, நச்சுத் தொட்டிகளில் கழிவுநீரை அகற்ற இறங்கி பணி செய்யும்போது இறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்க நீதிப் பேராணை எண் 583/2003–ல் அவமதிப்பு வழக்கு 132/2012–ல் வழக்கு தொடர்ந்ததில் 27–3–2014 அன்று, அவ்வாறு 1993 முதல் மரணமடைந்தவர்களைக் கண்டறிந்து தலா ரூ.10 இலட்சம் ஈட்டுத் தொகை அவர்களது குடும்பத்தினருக்கு வழங்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி, இத்துறையின்கீழ் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும் நகராட்சிகள், மாநகராட்சிகள், பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின்மூலம் நேரடியாகவோ அல்லது ஒப்பந்ததாரர் மூலமாகவோ பணியில் ஈடுபடுத்தி, 1993 ஆம் ஆண்டு முதல் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 63 என கண்டறியப்பட்டு அவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.6.30 கோடி ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று, நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் தனியார் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள நச்சுத் தொட்டிக் கழிவுகளை அகற்றும்போது மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 161 என கண்டறியப்பட்டு அவர்களின் வாரிசுதாரர்களுக்கும் தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.16.10 கோடியும், 6 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு வருவாய்த் துறையின்மூலம் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ரூ.6 இலட்சமும் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10 இறந்த நபர்களின் வாரிசுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2019 ஜூலை 18] [திரு. எஸ்.பி. வேலுமணி]

கேரளாவில்தான் இந்த Jet Rodding machine இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக இருந்து அதனை வாங்கிப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றோம். அதேபோன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் இன்றைக்கும் இந்த மாதிரியான Amphibion machine போன்றவற்றையெல்லாம் வாங்குவதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். இப்போது 188 Jet Rodding இயந்திரங்கள், 305 தூர்வாரும் இயந்திரங்கள், 54 Super Sucker இயந்திரங்கள், 30 ஜெட்டிங் உறிஞ்சும் இயந்திரங்கள் (Jetting and Suction machine) என மொத்தம் 577 இயந்திரங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் மனிதர்கள் பாதாள சாக்கடை மற்றும் நச்சுத் தொட்டிகளில் இறங்கி வேலை பார்க்கக் கூடாது என்பதற்காகப் பல்வேறு இயந்திரங்கள் வாங்கிப் பயன்பாட்டில் உள்ளன. தற்போது மனிதர்களை இப்பணியில் ஈடுபடுத்துவது இல்லை. சில தனியார் மட்டுமே விவரம் புரியாமல் நச்சுத் தொட்டி சுத்தம் செய்ய மனிதர்களை ஈடுபடுத்துகின்றனர். அவர்களுக்கு பல்வேறு விழிப்புணர்வுகள் தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசின்மூலம் கடந்த 8 ஆண்டுகளில் 141 Jet Rodding இயந்திரங்களும், 235 தூர்வாரும் இயந்திரங்களும், 51 Super Sucker இயந்திரங்களும், 30 ஜெட்டிங் மற்றும் உறிஞ்சு இயந்திரங்கள் (Jetting and Suction machines) என மொத்தம் 457 இயந்திரங்கள் வாங்கப்பட்டன. அதேபோல், பெருநகர சென்னை மாநகராட்சியில் மட்டும் 7 Super Sucker இயந்திரங்கள் ரூ.36.40 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டத்தை நீங்கள் தீவிரப்படுத்த வேண்டும் என்று கூறியிருந்தீர்கள். அது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றில் தனியார்கள் கூப்பிடும்போது அவர்கள் செல்லக் கூடாது என்பதற்கான விழிப்புணர்வையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள் இன்னும் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். விருதுநகர் மாவட்டத்தில், முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 3 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2019 ஜூலை 18

11–8–2010 அன்று நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. நீங்கள் கூறியவாறு உங்களது ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டது. அதற்கு அடிக்கல்கூட நாட்டப்பட்டது என்று கூறினீர்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் இந்த 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும், நிதியாதாரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டது. நீங்கள் Contractor–ஐயே இறுதி செய்யவில்லை, அதற்குள் அடிக்கல் நாட்டிவிட்டீர்கள். அம்மா ஆட்சியில் 29–12–2011 அன்று பணியாணை வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன. இவற்றில் 173 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 7 பேரூராட்சிகள் மற்றும் 4 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 395 ஊரகக் குடியிருப்புகளுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் டிசம்பர் 2014–ல் முடிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 29–5–2015 அன்று துவக்கி வைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன. இத்திட்டத்தின்மூலம் 4 இலட்சத்து 31 ஆயிரம் மக்களுக்கு நாளொன்றுக்கு 12 மில்லியன் லிட்டர் அளவுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், 190 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அருப்புக்கோட்டை, காரியாப்பட்டி, திருச்சுழி, நரிக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 5 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 637 ஊரக குடியிருப்புகளுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள், பிப்ரவரி 2015–ல் முடிக்கப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் 29–5–2015 அன்று துவக்கி வைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன. இத்திட்டத்தின்மூலம் 3 இலட்சத்து 88 ஆயிரம் மக்களுக்கு நாளொன்றுக்கு 10.26 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

மூன்றாவது கூட்டுக் குடிநீர்த் திட்டமான, 234 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, சாத்தூர், வெம்பக்கோட்டை, சிவகாசி, விருதுநகர், வத்திராயிருப்பு (பகுதி) திருவில்லிப்புத்தூர் (பகுதி) மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 755 ஊரகக் குடியிருப்புகளுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 29–12–2011–ல் பணியாணை வழங்கப்பட்டது. ஒப்பந்தக்காலம் மற்றும்

கால நீட்டிப்பு செய்தும், இப்பணியில் 33 விழுக்காடு பணிகளே, ஒப்பந்ததாரர் IVRCL நிறுவனத்தால் முடிக்கப்பட்டன. எனவே ஒப்பந்த விதிகளின்படி, 30—9—2014—ல் இந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தம் இரத்துசெய்யப்பட்டது. அதுபோல, மீதமுள்ள பணிகளைச் செயலாக்கும் பொருட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி 18—12—2014 அன்று இறுதி தேதியிட்டு கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி திறப்பதற்கு, IVRCL நிறுவனத்தினர், நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டார்கள். 18—12—2014 அன்று இடைக்கால தடை பெற்றதால், ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படவில்லை. இடைக்காலத் தடை 18—3—2014 அன்று விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, 25—3—2015—ல் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு, 28—1—2016 அன்று பணியாணை வழங்கப்பட்டது. இத்திட்டப் பணிகள் அனைத்தும் தற்போது முடிக்கப்பட்டு, சோதனையோட்டத்தில் உள்ளன. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பொற்கரங்களால் விரைவில் திறக்கப்படவுள்ளது என்பதையும், மக்கள் பயன்பாட்டிற்கு உடனடியாகக் கொண்டு வரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்மூலம், 5 இலட்சத்து 98 ஆயிரம் மக்களுக்கு, நாளொன்றுக்கு 21 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெத்தேல் நகர் பகுதியில் உள்ள கருவேலி மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஈஞ்சம்பாக்கம் கிராமத்தில் பெத்தேல் நகர் என்கின்ற பகுதியில் சர்வே எண் 282/1, 2, 3 கருவேலி மேய்க்கால் புறம்போக்கு 32 ஆண்டுகளாக 3,000 குடும்பங்கள் வசித்து வருகின்ற இடத்தில் இன்றைக்கு அவற்றை அப்புறப்படுத்துகின்ற ஒரு நிலை, ஒரு பரப்பரப்பான சூழல் அங்கே நிலவிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் அந்த கருவேலி நிலங்களையெல்லாம் கிராம*